மரம் வளர்ப்பதை ஊக்குவிக்கின்ற விதத்தில் நடவடிக்கை எடுக்க அரசு முயற்சி மேற்கொள்ளுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய யோசனையை அரசு சிந்திக்கும். தனியார் மரம் வளர்ப்பதற்கு, அவர்களுக்கு ஆலோசனைகளையும் வழங்குவதற்கு வனத் துறை தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 57, திரு. என்.கே. பெருமாள், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.

57—

பால் உற்பத்தியாளர் மையம்

•31632—திரு. என்.கே. பெருமாள்:

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் மையத்தைப் பிரித்து, தூத்துக்குடி மாவட்டத்திற்கென்று தனியாக பால் உற்பத்தியாளர் மையம் உருவாக்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் மையத்தைப் பிரித்து, தூத்துக்குடி மாவட்டத்திற்கென்று தனியாக பால் உற்பத்தியாளர் மையம் உருவாக்கிட சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என்.கே. பெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றரை கோடி தொண்டர்களின் ஒளி விளக்காகவும், ஆறு கோடி தொண்டர்களின் அற்புத அன்னையாகவும், பெற்றோர்களை இழந்து தவிப்பவர்களுக்குப் பிதாவாகவும், 100 கோடி இந்திய மக்களின்

2004 பிப்ரவரி 12]

எதிர்பார்ப்பாகவும், இமைமூடாது இயங்கி வருகின்றவரும், எங்களை எல்லாம் இயக்குகின்றவரும், பவனி போற்றும் தங்கத் தலைவி, கழகத்தின் காவல் தெய்வம், 'இல்லை' என்ற சொல்லை, அகராதியிலிருந்து நீக்கியவரும், முதலமைச்சர்களுக்கெல்லாம் முதலமைச்சராகிய எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி தமிழ்நாட்டு முதல்வர் அம்மா அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி சமர்ப்பிக்கிறேன் தாயே!

ஆற்றுப் பாசனமோ, கால்வாய்ப் பாசனமோ இன்றி, கால்நடை வளர்ப்பதையே பிரதானத் தொழிலாகக் கொண்டு பிழைப்பு நடத்தும் விளாத்திகுளம் தொகுதி மக்களின் இன்றியமையாத தொழில் பால் உற்பத்தியாகும். அந்தப் பால் உற்பத்தியின் வாயிலாக கறவை மாடுகள் மூலம் கறக்கப்படும் பாலினை திருநெல்வேலி மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் மையத்திற்கு அளித்து வருகின்றனர். மிகவும் அதிக தூரமுள்ள மையத்திற்குச் செல்வதில் சில நேரங்களில், குறிப்பிட்ட நேரத்தில் செல்ல தடங்கல் ஏற்பட்டால், பால் திருப்பி அனுப்பப்படுகிறது. இதனால் பயனாளிகள் இழப்புக்குள்ளாகிறார்கள். இதனால் ஏற்படும் இழப்பைச் சரிசெய்யும் வகையில், தூத்துக்குடி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், எனது தொகுதியான விளாத்திகுளம் தொகுதியில், அந்த மாவட்டத்திற்கென்று ஒரு தனி மையம் அமைத்துத் தர மாண்புமிகு தாயுள்ளம் கொண்ட அம்மா அவர்களுடைய அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம், இலாபகரமாகச் செயல்பட வேண்டுமென்றால் நாள் ஒன்றுக்கு ஒரு இலட்சம் லிட்டர் பால் தேவைப்படும். ஆனால் தூத்துக்குடி மாவட்டத்தில், நாள் ஒன்றுக்கு, 30,250 லிட்டர் பால் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகிறது. புதிதாக பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் அமைக்க, ரூ.5 கோடி தேவைப்படும். இதற்குண்டான நிதி வசதி இல்லை. தூத்துக்குடி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் அமைக்க, தேவையான சொந்த நிலம் அந்த ஒன்றியத்திற்கு ஏதுமில்லை. தூத்துக்குடி நகரம், சிறந்த பால் விற்பனை மையமாக மட்டுமே செயல்பட்டு வருகிறது.

திருநெல்வேலி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய இரு மாவட்டங்களுக்கும் பொதுவாகச்

செயல்பட்டு வருகிறது. திருநெல்வேலி மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தை இரு மாவட்ட ஒன்றியங்களாகப் பிரித்துச் செயல்படுத்தும்போது, உற்பத்தி ஓரிடம், விற்பனை ஓரிடம் என்ற நிலை உருவாக வாய்ப்பு இருக்கிறது. அதிக நிர்வாகச் செலவினங்கள் காரணமாகவும் இரு ஒன்றியங்களும் நஷ்டத்தில் செயல்படக்கூடிய சூழ்நிலை ஏற்படும். எனவே தூத்துக்குடி மாவட்டத்திற்கென தனியாக ஒரு மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் அமைக்க போதிய வாய்ப்புகள் இல்லை என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் *10-55*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அ. சிவபெருமாள்.

திரு. அ. சிவபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டத்தில் ஒட்டப்பிடாரம், விளாத்திகுளம் ஆகிய பகுதிகளிலே எந்தவிதமான தொழிற்சாலையும் கிடையாது. அங்குள்ள மக்கள் விவசாயத்தையே பெரும் தொழிலாக நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பல ஆண்டுகளாக அங்கு மழை பொய்த்துவிட்ட காரணத்தினால், அங்குள்ள மக்கள் வீட்டிற்கு *2* மாடுகள், *3* மாடுகளை வைத்து பால் கறக்கும் தொழிலையே தங்களுடைய தொழிலாகச் செய்து கொண்டு இருக்கிறார்கள். ஆகையினால் தூத்துக்குடி மாவட்டம், திருநெல்வேலி மாவட்டத்தோடு ஒன்றுபட்ட மாவட்டமாக இருந்த காலகட்டத்திலே, திருநெல்வேலி மாவட்டத்திலே ஒரு கூட்டுறவு மையம் அமைக்கப்பட்டிருந்தது. ஆனால் இன்று அந்தப் பகுதியிலே நெடுஞ்சாலைத் துறை அருகே அமைந்துள்ள கயத்தாறு பகுதியிலே அதிகமான பால் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. ஆகையினாலே கயத்தாறு பகுதியிலே ஒரு மத்திய கூட்டுறவு பால் உற்பத்தி மையம் அமைக்க அரசு ஆணையிடுமா என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் குறிப்பிடுகிற கயத்தாறு பகுதியில் அதிகமான பால் வரக்கூடிய வாய்ப்பு இருக்குமானால், அங்கே ஒரு Bulk Cooler--மொத்த பால் குளிர்வு இயந்திரம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி எஸ். ராஜம்மாள்.

2004 பிப்ரவரி 12]

திருமதி எஸ். ராஜம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் வாயினாலேயே தூத்துக்குடியில் அதிகமான பால் விற்பனை ஆகிறது என்று சொல்கிறார். அப்படி இருக்கும்போது, திருநெல்வேலி போவதற்குள் பால் கெட்டுவிடும் என்பதால், தூத்துக்குடி மாவட்டத்திலே தூத்துக்குடியைச் சுற்றியுள்ள கிராமத்திலோ அல்லது தூத்துக்குடியிலோ அந்த மையம் அமைக்க ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே கூட்டுறவு பால் ஒன்றியம் அமைப்பதற்கு உண்டான வாய்ப்புகள் இல்லை என்பதற்கான காரணங்களை ஏற்கெனவே மிகத் தெளிவாகக் குறிப்பிட்டு இருக்கிறேன். பால் விற்பனை அதிகமாக நடக்கிறது. ஆனால் உற்பத்தி எவ்வளவு இருந்தாலும், இப்போது அங்கே இருக்கிற பால் குளிரூட்டும் நிலைய வசதி, பால்பண்ணை வசதி போதுமானதாக இருக்கிற காரணத்தினால் இன்னொரு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் அங்கே அவசியம் இல்லை என்ற காரணத்தினால், அதற்கான முயற்சிகள் மேற்கொள்வதற்கு வாய்ப்பு இல்லை என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 58, திரு. அ. சிவபெருமாள், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

58—

சுற்றுலா மையங்கள்

***20372—திரு. அ. சிவபெருமாள்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, கயத்தாறு மற்றும் கழுகுமலையில் சுற்றுலா மையங்கள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,